விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 03 புதன்கிழமை (17.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 149

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## இலங்கை அரசுக்கு உதவுவது அமெரிக்காவின் கடமை

### கொழும்பு வந்த பிரதிச்செயலாளர்



இலங்கை அரசுக்கு எவ்வேளையிலு ம் உதவி வழங்குவது அமெரிக்காவின்கடமையாகும். இவ்வாறு அமெரிக்க ராஜாங்கத்திணைக்களத்தின் ராஜதந்திரியும் தெற்கு மற்றும் மத்திய கிழக்கு ஆசிய விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளருமான டொனால்ட் காம்ப் தெரிவித்துள்ளார். கொழும்புக்கு நேற்று முன்தினம் வருகை தந்த அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி யிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் யுத்தசூழ்நிலை ஏற்படாதிருக்க சகல தரப்பினரும் முயற்சிக்க வேண்டும்.

இலங்கையின் தற்போதைய சூழ்நிலை குறித்து இந்தியாவுடன் பேசியுள்ளோம். தற்போதைய கள நிலை பயங்கரமாக மாறுமென அமெரிக்கா கருதவில்லை. அரச கட்டுப்பாட்டிற்குள் நடைபெறும் தாக்குதல் தொடர்பில் அரசு சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கூறினார். (ந-5)

## புலிகளின் காவலரண் நோக்கி அரச படையினர் தாக்குதல்

### ஒரு போராளி சாவு; நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நாகர்கோயில் மற்றும் வவுனியா, ஓமந்தை ஆகிய இடங்களில் உள்ள தமது முன்னரங்க காவல் நிலைகளை நோக்கி அரச படைகள் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் ஒரு போராளி வீரச்சாவடைந்ததாகவும் நாலுபேர் காயமடைந்துள்ளதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை 5.45 மணியளவில் நாகர்கோயில் பகுதியில் உள்ள தமது முன்னரங்க காவல் நிலைகள் மீது குண்டுத்தாக்குதல்களுடன் துப்பாக்கிப்பிரயோகத்தாக்குதலையும் படையினர் நடத்தியதாகவும் விடுதலைப்புலிகளின் ஊடகத்துறை இணைப்பாளர் தயாமாஸ்டர் தெரிவித்தார்.

இத் தாக்குதல் பற்றி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதுடன் அரச படைகளின் தாக்குதல் தொடருமானால் தாங்களும் திருப்பித்தாக்க நேரிடும் என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

இதேநேரம் வடமராட்சி கிழக்கு பகுதியில் நேற்று இரவு முழுவதும் ஹெலிகொப்டர்கள் ஓடித்திரிந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந)

# படுகொலைகளை தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுங்கள்

### யாழ்., மன்னார் ஆயர்கள் ஐ.நா. செயலருக்கு அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். இதனைத் தடுத்து நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையும் ஐக்கிய நாடுகள் சபை செயலர் கொபிஅனானுக்கு கூட்டாக அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

## அரச துறையில் பணிபுரிவோர் கடமைக்குச் செல்லவேண்டும்

### படைத்தரப்பு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரச துறையில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் நாளை 18 ம் திகதி முதல் தமது கடமைக்குச் செல்லவேண்டும். இவ்வாறு பலாலி பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டளைத் தளபதிக்கு பதிலாக மேஜர் கே.பி.எம்.த.ஒ.விஜேசிங்க கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள அச் செய்திக்குறிப்பில் அரச துறையில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் நாளை 18ம் திகதியில் இருந்து தமது கடமை இடங்களுக்கு சமுகமளித்து மக்களுக்கு சேவை செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

## பரவலாக கைக்குண்டு வீச்சு இரு பொதுமக்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

படையினர் மீதான கைக்குண்டுத் தாக்குதல்கள் நேற்று பரவலாக இடம்பெற்றுள்ளன.

சங்கானை, நாயன்மார்கட்டு, கொக்குவில், உடுப்பிட்டி (08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை அனுமதி தெரிவானோர் விபரம்

சற்கோர் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழகத்தின் 2005/2006 கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுப்பிவைத்துள்ளது.

கலை, பௌதிக விஞ்ஞானம், சங்கீதம், நடனம் தவிர்ந்த ஏனைய கற்றை நெறிகளுக்கான மாணவர்களின் பெயர்களே வெளியாகியுள்ளன.

அனுமதி பெற்ற மாணவர்கள் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. ஏனைய துறைகளுக்கு தெரிவானவர்களின் விபரம் இவ்வாரத்தில் வெளிவரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-15)

## படுகொலைகளை கண்டித்து கிளி.யில் மாபெரும் பேரணி

(கிளிநொச்சி)

தமிழினத்தை படைகள் கொடூரமாகக் கொன்றொழித்து வருவதை சர்வதேச சமூகம் கண்டித்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி கிளிநொச்சி வாழ் மக்கள் கண்டனக் குரல் எழுப்பியுள்ளனர்.

கிளிநொச்சி பொது அமைப்புக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை ஒழுங்கமைத்த பேரணியில் அரச படைகளின் தமிழினப் படுகொலைகளை சர்வதேச சமூகம் கண்டித்து குரல் கொடுக்கவேண்டுமென்ற வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

அல்லைப்பிட்டியில் பச்சிளம் பாலகி மற்றும் சிறுவன், அவர்களின் பெற்றோர் உறக்கத்தில் வைத்து கொல்லப்பட்ட படத்தை மக்கள் தம் கைகளில் தாங்கியிருந்தனர்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி பொது மைதானத்தில் தொடங்கிய கண்டனப் பேரணி கணேசபுரத்தில் உள்ள யுனிசெவ் அலுவலகத்தில் முடிவடைந்தது.

கிளிநொச்சி நகரில் உள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர், பாட சாலை மாணவர்கள், பொதுமக்கள் என ஆயிரத்திற்கும் அதிகமானோர் திரண்டு தமது கண்டனக்குரலை எழுப்பினர்.



இப் பேரணியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், கி.சிவநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். பேரணி யுனிசொப் அலுவலகத்தில் முடிவடைந்த போது அங்கு கண்டனக்கூட்டம் நடைபெற்றது. (08 ஆம் பக்கம் பார்க்க)

# பெண் அடிமைத்தனம் இல்லாத சமூகத்தை எமது ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும்!

## நிதித்துறைப்பொறுப்பாளர் தமிழேந்தி



(கிளிநொச்சி)

சாதிகளற்ற, மத வேறுபாடற்ற, நிலத்தால் மாறுபடாத பெண்ணடிமைத்தன்மை இல்லாத சமூகம் இந்த மண்ணில் உருவாக்கப் பட வேண்டும். அப்போதுதான் இந்த மண்ணில் இதுவரை செய்யப்பட்டிருக்கின்ற ஈகம் பெருமதிப்புடையதாக அமையும் என்று தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஜெயபுரம் மகாவித்தியாலயத்திற்கு தமிழீழ நிதித்துறையினர் கட்டியமைத்த வகுப்பறைக் கட்டடம் பாடசாலை நிர்வாகத்திடம் கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10.30மணியளவில் கையளிக்கப் பட்டது.

முப்பத்தொரு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக் கட்டடத்தை தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி பாடசாலை அதிபரிடம் கையளித்தார். மாவீரர் லெப். கேணல் விக்ரர் நினைவாக இக்கட்டடம் அமைக்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ. தமிழேந்தி சிறப்புரை ஆற்றுகையில்,

எங்கள் பிள்ளைகள் கல்வியில் மேம் பாடு அடைய வேண்டும் என்பதில் தேசியத் தலைவர் எப்போதும் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர். அதற்காக பல்வேறு முயற்சிகளையும் எடுத்துவருகிறார்.

இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து எங்களுடைய இனத்தை அடிமைப் படுத்தி அழிக்க வேண்டும் என்பதற்காக சிங்களப் பேரினவாதம் பல்வேறு நடவடிக்கைகளை இந்த மண்ணில் செய்து வருகிறது.

இலங்கை விடுதலையடைகிற போது நீர்கொழும்பில் 53 தமிழ்ப்பள்ளிக் கூடங்கள் இருந்தன. இன்றைக்கு விஜயரட்ணம் இந்து மகாவித்தியாலயம் என்ற ஒரே ஒரு பள்ளிக்கூடம் மட்டுமே இருக்கிறது. மற்ற பள்ளிக் கூடங்கள் எல்லாம்.சிங்களப் பள்ளிகளாகவும் தமிழர்களை தமிழ் பேசும் சிங்களவர்கள் என்றும் பதிவு செய்தனர்.

தமிழ் மூலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்களை அந்தப் பள்ளிகளுக்கு நியமிக்காமல் நிறுத்தி சிங்கள ஆசிரியர்களை அமர்த்தினார்கள். சிங்கள மொழியிலே கல்வி கற்பித்து படிப்படியாக அங்கே எங்கள் இனமே இல்லாமல் முற்றாக அழித்தொழித்திருக்கிறார்கள்.

நீர்கொழும்பில் இன்றைக்கு சிங்களவர் என்று சொல்லிக்கொண்டு வாழ்கின்றவர்கள் யார் என்றால் இலங்கை விடுதலை யடைவதற்கு முன்பு தமிழர்களாக இருந்தவர்கள் தான். நீர்கொழும்பில் நடந்ததுதான் சிலாபத்திலும் நடந்தது.

இந்த கல்விக்கூடாக இனத்தைக் கூட மாற்ற முடியும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

மொழி அழிந்து விடுமானால் இனம் மாறிவிடும். உலகத்திலே இப்படி அழிந்து போன இனங்கள் நிறைய உண்டு.

ஆக ஆசிரியப் பணி என்பது மிக உயர்ந்த பணி .உங்கள் இனத்தை இனமாகப் பேணக் கூடிய சூழ்நிலையும் வலிமையும் உங்களிடத்தில் உள்ளது.

தமிழ்க் குழந்தைகளை தமிழர்களாக வளர்த்தெடுக்கவேண்டிய வலிமை உங்களுக்கு உண்டு.

அவர்களுக்கு அறிவைப் புகட்டி பகுத்தறிவாளர்களாக சமூகத்துக்கு உதவக் கூடியவர்களாக மாற்றுவது உங்கள் கைகளில்தான் உண்டு.

பெற்றோர் தங்களது குழந்தைகளை 5 அல்லது 6 வயதில் உங்களிடம் ஒப்படைத்துவிடுகிறார்கள் அதன் பின்னர் சமூகத்துக்குரிய மனிதர்களாக அவர்களை மாற்றியமைக்க கூடிய கடமையை நீங்கள் தான் செய்கின்றீர்கள்.

அந்தக் கடமையைச் செய்யும் உங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தனது வலிமைக்கேற்றபடி எல்லாவற்றையும் செய்யும்.

வன்னியில் ஆசிரியர் பற்றாக் குறை நிலவுகிறது. அறிவியல் பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. இந்த நிலையை நீக்க வேண்டும் என்பதற்காக தலைவரது பணிப்பிற்கமைய எமது கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் பல்வேறு பள்ளிகளுக்கும் ஆசிரியர்களை அமர்த்துகின்றார். இதற்குரிய நிதியையும் இயக்கம் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

எங்களுடைய மொழி சீரழிந்து கொண்டிருக்கிறது. மிக வேகமாகச்சீரழிந்து கொண்டிருக்கிறது. இந்தச் சீரழிவு எப்படி வந்தது என்று ஆராய வேண்டும்.

இந்த நிலைமையை மாற்ற வேண்டிய கடமையை ஆசிரியர்கள் செய்யவேண்டும் அந்த பொறுப்பு உங்க ளுக்கு உள்ளது.

எங்கள் இனம் இனமாக வாழ வேண்டுமெனில் மொழி காப்பாற்றப்படவேண்டும் மொழிவழிப்போராட்டமாகத்தான் நமது போராட்டம் தொடங்கியது.

1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்திற்குப் பின்னால் மொழிவழிப் போராட்டமாக தொடங்கிய நமது போராட்டம் இன்றைக்கு விடுதலைப் போராட்டமாக பெரிய அளவுக்குப் போர் நடந்துகொண்டிருக்கிறது.

போர்க்காலத்தில் 10 இலட்சம் மக்கள் எங்கள் மண்ணிலிருந்து வெளியேறி உள்ளனர். அவர்கள் வாழ்கின்ற நாட்டில் அந்தந்த நாட்டு மொழிகளிலே அவர்களது பிள்ளைகள் படிக்கின்றனர். அவர்கள் திரும்பு வருவார்களா இல்லையா என்பது தெரியாது திரும்பி வந்தால் கூட அவர்கள் தமிழர்களாக வரமாட்டார்கள். சிங்கள அரசாங்கம் திட்டமிட்டுச் செய்த சதி இது.

எங்களது குழந்தைகளுக்கு நல்ல முறையில் தேசபப்றறை ஊட்டி வளருங்கள் தமிழ் மொழியை அதனுடைய அழகும் தொன்மையும் கெடாமல் அந்த மொழியைக் கற்பிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள். ஒழுக்கம் உள்ள சமூகமாக ஒழுக்கம் உள்ள குழந்தைகளாக வளர்த்தெடுக்க வேண்டியதைச் செய்யுங்கள்.

இதேவேளை, ஆங்கிலத்தையும் நாம் புறந்தள்ளிவிட முடியாது அறிவியலை நாம் அறிந்து கொள்ளவும் உலகத்தோடு தொடர்பாடல் வைத்துக்கொள்ளவும் ஆங்கிலம் தேவை. அதில் எந்தவித மாற்றுக்கருத்தும் கிடையாது.

ஆனால் எங்கள் மொழியை நாம் விட்டால் எங்கள் இனம் படிப்படியாக அழிந்து விடும். தமிழ்நாட்டில் தமிழ்செத்துக் கொண்டிருக்கிறது.

சேர்ந்து வருகிற நான்கைந்து சொற்றொடர்கள் எடுத்தால் அதில் ஒன்று அல்லது இரண்டு தமிழ் இருக்கும் மற்றவை எல்லாம் இந்தி அல்லது ஆங்கிலம் அல்லது உருதுச் சொல்லாக இருக்கும் ஆக தமிழ் மொழி ஓரளவுக்கு காப்பாற்றப்படுகின்ற மண் இந்த மண் தான்.

சாதிகளற்ற, மதவேறுபாடற்ற, நிலத்தால் மாறுபடாத பெண்ணடிமைத்தன்மை இல்லாத சமூகம் இந்த மண்ணில் உருவாக்கப் பட வேண்டும்.

அப்போதுான் இந்த மண்ணில் இதுவரை செய்யப்பட்டிருக்கிற ஈகம் பெருமதிப்புடையதாக அமையும்.

அந்தக் கடமை ஆசிரியர்களுக்கு உண்டு. அந்தக் கடமையை ஆசிரியர்கள் நிறைவேற்ற வேண்டும் என்றும் பணிவோடு வேண்டுகிறேன்.

பள்ளிகளிலே படிக்கும் குழந்தைகளே தேசப்பற்றோடும் இனப்பற்றோடும் படி யுங்கள் உங்கள் மொழியை நன்றாகப் படியுங்கள் ஆங்கிலத்தையும் படியுங்கள் ஒழுக்கம் உள்ளவர்களாகவும் அகத் தூய்மை புறத் தூய்மை உள்ளவர்களாகவும் வாழுங்கள் என்றார். (கு)

## பயிற்சி நிலையம் அமைக்க கோரிக்கை

(கொழும்பு)

தருண அருண என்னும் திட்டத்தில் பட்டதாரி பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் .

ஆனால்வடகிழக்கில் பயிற்சி பெறு வதற்கு பயிற்சி நிலையங்கள் இல்லாது இருப்பது வேதனைக்குரியது என மட்டக் களப்பு மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகசபை தொழில் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுத்து பயிற்சியாளர்களுக்கு வசதியும் பாதுகாப்பும் உள்ள பயிற்சி நிலையத்தை உருவாக்கிக்கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

வடகிழக்கில் பல பயிற்சி நிலையங்களை நிறுவவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இத்திட்டத்திற்கு உலக வங்கி மற்றும் வர்த்தக சம்மேளனங்கள் உதவி வழங்குவது குறிப்பிடத்தக்கது. (கு)

## இராசி பலன்

**17.05.2006**
**(வைகாசி 03, புதன்கிழமை)**
**சதுர்த்தி மு.ப.9.44மணிவரை**
**பூராடம் முன்னிரவு 9.00மணிவரை**
**இராகுகாலம் 11.53-1.23மணிவரை**
**சுபநேரம் 4.23-5.53 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | பிதா சிந்தை, பித்த ரோகம், சரீரப் பிரயாசை, எதிர்பாராத நன்மை. |
| இடபம் | காரிய தடங்கல், வீண் தொல்லை, உடல் நலக்குறைவு , போசன சுகம். |
| மிதுனம் | களஸ்திர நன்மை, நல்ல வரவேற்பு, காரிய அனுகூலம், விருந்துபசாரம். |
| கடகம் | சுவாரஸ்யம், சுப காரியம், பெரியோர் உதவி, உடல் நலம். |
| சிங்கம் | வேலைச்சுமை நிலைமாற்றம், பண விரயம், மரியாதைக் குறைவு. |
| கன்னி | புதிய விடயம் , வாக்குமேன்மை, குடும்ப சுகம், காரியதாமதம். |
| துலாம் | அனனியர் சந்திப்பு, பிறர் உதவி, அதிகாரகள் ஒத்தாசை குறைவு, நல்ல முயற்சி. |
| விருச்சிகம் | உணர்ச்சிவசப்படல், குடும்பக் கவலை, முயற்சிதாமதம், பிரயாணம். |
| தனுசு | ஆ்ரோக்கியம், தொழில் விருத்தி, கற்பனை மிகுதி, முயற்சிபலிதம். |
| மகரம் | இடமாற்றம், மரியாதைக் குறைவு, காரிய தாமதம், பண விரயம். |
| கும்பம் | உறவனர் வருகை, நல்ல செய்தி, தொழில வருவாய், முயற்சி பலிதம். |
| மீனம் | அதிகாரம், பிறருக்கு உதவுதல், போசன சுகம், கற்பனை மிகுதி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# தமிழீழத்துக்கான கடல் இறைமை, உரிமையை நிராகரிக்கின்றது அரசாங்க சமாதான செயலகம்

(கொழும்பு)

தமிழர் தாயகக் கடற்பிரதேச உரிமையானது தமிழீழத்துக்கு உரியது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர்.

இதை வெளிப்படுத்தும் வகையில் வெற்றிலைக்கேணிச் சமரும் நடத்தப்பட்டது.

இந் நிலையில் விடுதலைப் புலிகள் வெளியிட்டிருந்த இறைமை உரிமையை நிராகரிப்பதாக அரச சமாதான செயலகம் அறிவித்துள்ளது.

அரச சமாதான செயலகம் கடந்த திங்கட்கிழமை இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில்,

இராணுவச் சம நிலையில் இரு தரப்பு யுத்தநிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தால் அரசுக்கும் அரச சார்பற்ற சக்திகளுக்கும் இடையே நடத்தப்படும் பேச்சுக்கள் உள்ளிட்ட எந்தப் பேச்சுவார்த்தையும் இரு தரப்பு மதிப்பளிப்பது என்கிற அடிப்படையில் தான் நடத்தப்படுகின்றன.

இதுவே நோர்வே அனுசரணையாளர்களால் முன்னெடுக்கப்பட்ட தமிழீழவிடுதலைப் புலிகளுடனான அனைத்து உயர்நிலைப் பேச்சுக்களிலும் அரசாங்கத்தால் கடைப் பிடிக்கப்பட்டு வந்துள்ளது. அது தொடரும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பிலான தமிழீழ விடுதலைப்புலிகளின் இந்த கருத்தானது அந்த ஒப்பந்தம் குறைபாடுள்ளது என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

கடற்பிரதேசங்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ளவை அரச சார்பற்ற சக்திகள் கட்டுப் படுத்தி வைக்க முடியாது என்று கண்காணிப் புக்குழு தெரிவித்திருப்பதை நாம் ஏற்கிறோம் ஆகையால் இது மிக மிக பாரதூரமான யுத்த நிறுத்த மீறலாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிழல் கடற் படைக்கு சர்வதேச விதிகளின்படியோ இலங்கையின் யாப்பின் கீழோ எதுவித சட்டப்பூர்வ அங்கீகாரமும் இல்லை இத்தகைய கடற் படையானது சர்வதேச சமூகத்தினால் எங்குமே அங்கீகரிக்கப்பட்டதும் இல்லை.

சர்வதேச விதிகளின் படி இத் தகைய இறைமை உரிமையானது அரசுக்கு மட்டுமே உண்டு. அரசுக்கான இந்த உரிமையை ஒரு தலைப்பட்சமாக உரிமை கோருவதன் மூலம் வழங்க முடியாது.

2002ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தமானது இரு அம்சங்களைக் கொண்டது போர் நடவடிக்கைகளைக் கைவிடவும் இறுதித் தீர்வு காண்பதற்கான அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்ளும் சூழலை உருவாக்கவும் ஏற்படுத்தப் பட்டது.

ஐக்கிய கட்டமைப்புக்குள் எந்த வகையிலும் இலங்கையின் இறையாண்மையை பிரதேச ஒற்றுமையை மீறாத பிளவுபடாத இலங்கைக்குள்ளான இறுதித் தீர்வையே அது வலியுறுத்துகிறது. இரு சம தரப்பு என்றோ இராணுவச் சமநிலையின் அடிப்படையில் என்றோ குறிப்பிடப்படவில்லை என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# கொல்லப்பட்டவரின் மனைவிக்கு மிரட்டல்

மண்டூர் 13ஆம் கொலனியில் கடந்த 28ஆம் திகதி ஆயுதக் குழு ஒன்றினால் சுட்டுக்கொல்லப்பட்ட இராசதுரை மணிவண்ணனின் மரண விசாரணையில் சாட்சியமளித்த அவரது மனைவியும் அயலவரும் கடத்தப்பட்டுள்ளனர்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் இடம்பெற்ற போது அங்கு சென்று திரும்பிய அவரது மனைவியையும் அயலவரையும் வெள்ளை வானில் வந்தவர்கள் கடத்தினர்.

சம்பவத்தை நேரில் கண்ட அவர்கள் நீதிமன்றில் சாட்சியம் சொல்லக்கூடாது எனவும் அவ்வாறு சொன்னால் கொல்லப்படுவார்கள் எனவும் மிரட்டியதுடன் வழக்கு முடியும் வரை அயலவரை தாம் தடுத்து வைத்திருக்கப் போவதாகவும் கூறியுள்ளனர்.

கொல்லப்பட்ட மணிவண்ணனின் மனைவியை மட்டும் விடுதலை செய்திருக்கும் ஆயுதக் குழுவினர் அவர் இது தொடர்பில் நீதிமன்றில் சாட்சியமளித்தால் அயலவரைக் கொன்றுவிடுவோம் என்றும் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பில் கொல்லப்பட்டவரின் மனைவி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளார். (க)


சுன்னாகம்

கதிரமலைச் சிவன் மஹோற்சவம்



4ஆம் நாள்

இன்று நாகலோகக் காட்சி



பார்த்தருள்வா

கதிரைத் தலைவா கண்மூன் றுடனே
வந்திடு சுன்னை வள்ளலே அம்பலவா
விதியை மார்க்கண் டர்குமாற் றினாய்நின்
பதியினில் பணிந்தோம் பரவினோம் பார்த்தருளே.

-கலாபூஷணம் சு.துரைசிங்கம்


## குடிநீர் இல்லை

ஊர்காவற்றுறை துறைமுக வீதியிலுள்ள புதிய பஸ் நிலையத்தில் குடிதண்ணீர் இல்லாததால் பயணிகள் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் அங்கு மலசலகூடங்களும் இல்லாததால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரியவருகின்றது. (து-72)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பொறியியல் விஞ்ஞான கற்கை நெறிகளிற்கான(NDES)புதிய கல்வியாண்டிற்கான பயிலுனர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்களினை கட்டுநாயக்க எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனம் தகுதியானவர்களிடமிருந்து கோரியுள்ளது.

க.பொ.த உயர் தரத்தில் கணிதப்பிரிவில் சித்தியடைந்த மாணவர்கள் மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவங்களை நிறுவனத்திலோ அல்லது இல 07, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பிக்கும் இறுதித்திகதி 2.6.2006 என்று மாணவர் சங்க செயலாளர் பி.இந்திரசேன தெரிவித்துள்ளார். (க-29)

## அஞ்சல் அதிபர் இல்லை

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறையில் பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள அஞ்சல் அலுவலகத்தில் அஞ்சலதிபர் இல்லை என தெரியவருகின்றது.

முன்னர் அங்கு கடமையாற்றிய அஞ்சலதிபர் எஸ்.சிவநாதபிள்ளை கோப்பாய் அஞ்சலதிபராக இங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (து-72)

## நியமனம்

(தென்மராட்சி கிழக்கு)

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளராக சி.தேவகுமார் அண்மையில் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளராக இருந்து இடமாற்றம் பெற்று இங்கு கடமையைப் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-122)

## மிதிவெடி அகற்றும் வேலைகள் மீள ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் பிரிவினருக்கு யாழ்.மாவட்டத்தில் மீண்டும் வேலைகள் கொடுக்கப்பட்டுள்ளன. கடந்த 8ஆம் திகதி தொடக்கம் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (து-72)

## மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவை

வடபிராந்திய போக்குவரத்து சபையின் தீவுப் பகுதிக்கான பஸ் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி காலையிலும் மாலையிலும் பஸ் சேவைகள் நடைபெறும். இதற்கிடையில் ஊர்காவற்றுறை தனியார் பேருந்து சேவையிலுள்ள மினிபஸ்கள் காலை 6.30 மணியிலிருந்து பிற்பகல் 2.30 மணி வரை சேவையில் ஈடுபடுவதாக நேரக்கணிப்பாளர் தெரிவித்தார். (து-72)

# அரசியல்வாதிகளின் தீர்க்கதரிசனமற்ற செயற்பாடுகளே நெருக்கடிக்கு காரணம்

## பௌத்த அமைப்புக்களின் ஒன்றியம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் இடம்பெறுகின்ற யுத்தம் இந்தளவு நெருக்கடி நிலைமையைத் தோற்றுவிப்பதற்கு கடந்தகால அரசியல்வாதிகளின் தீர்க்கதரிசனமற்ற செயற்பாடுகளே காரணம் என்று பௌத்த அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 1971,1988,1989 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரங்களின் காரணமாக ஒரு இலட்சம் பேர் வரை பலியாகியுள்ளனர்.

இதனால் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு கடுமையாக பாதிப்படைந்தது என்றும் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பௌத்த அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு யோசனைகள் அடங்கிய திட்டமொன்றையும் சமர்ப்பித்துள்ளது.

'கடந்த 50 வருடகால அனுபவங்களைக் கொண்டு எதிர்வரும் 50 வருடங்களுக்கான பிரவேசம்' என்ற தொனிப்பொருளில் மேற்படி யோசனைகள் அமைந்துள்ளன.

இந்த யோசனைகளைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி 'மஹிந்தவின் சிந்தனைகள்' கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் ஒழுக்கமுள்ள, வினயமான சமூகமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். (க)

# ஆறு படையினர் தப்பி ஓட்டம்

படையினர் மீது அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் கிளைமோர் தாக்குதல்கள், குண்டுத் தாக்குதல்கள் என்பவற்றையடுத்து உளவியல் ரீதியாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள படையினர் தற்போது தங்கள் முகாம்களை விட்டு ஓட ஆரம்பித்துள்ளதாகத் தெரிகிறது.

அண்மையில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி படைமுகாமிலிருந்த 6 படைவீரர்கள் தங்களது உடமைகள், ஆயுதங்கள் என்பனவற்றையும் கைவிட்டு தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மார்ச் மாதம் 50ற்கும் மேற்பட்ட படையினர் விடுமுறையில் சென்று பின்னர் மீண்டும் படை முகாமுக்கு திரும்பவில்லை என்றும் தெரியவருகிறது. (து)

## வருடாந்த திருவிழா

(ஊர்காவற்றுறை)

பிரபலமான யாத்திரை ஸ்தலமாக விளங்கும் பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் வருடாந்த திருவிழா ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு திருவிழா திருப்பலியும் தொடர்ந்து பத்திமா அன்னையின் திருச் சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெற்று திருவிழா நிறைவுபெறும். (க-72)

# மட்டுப்படுத்தப்பட்ட பெற்றோல் விநியோகத்தால் மக்கள் சிரமம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பெற்றோல் நிலையத்தில் காலை 7 மணி தொடக்கம் 2 மணித்தியாலங்கள் மட்டுப்படுத்தப்பட்ட பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்படுவதால் ஏனைய நேரங்களில் வரும் பிரயாணிகள் பெற்றோல் பெறமுடியாது பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அத்துடன் மண்ணெண்ணெய் விநியோகமும் நிறுத்தப்பட்டுள்ளது. இரவில் மின் வெட்டு அமுலில் இருப்பதால் மக்கள் மண்ணெண்ணெய் இல்லாது பெரும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளார்கள். (க-29)

## மின்பாவனையாளர்கள் விசனம்

(சாவகச்சேரி)

வரணி பிரதேச மின் பாவனையாளர்களுக்கு மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய மின்கட்டண பட்டியல்கள் ஒரே தடவையில் வழங்கப்பட்டுள்ளன. இதனால் இரண்டு மாதங்களுக்குமுரிய கட்டணத்தை ஒரே தடவையில் செலுத்தவேண்டியுள்ளதாக பாவனையாளர் சார்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மின்கட்டண பட்டியல்கள் மாதா மாதம் வழங்கப்பட்டால் பாவனையாளர் கட்டணம் கட்டும்போது சிரமங்கள் குறையும் என மின் பாவனையாளர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை மின்சாரம் வழங்கப்பட்டும் மின்மானி இதுவரை பொருத்தப்படாமல் பல வீட்டு உரிமையாளர்கள் கூடிய கட்டணத்தைச் செலுத்தவேண்டியுள்ளதாகவும் மின்மானி பொருத்தப்பட்டவர்கள் குறைந்த கட்டணத்தை செலுத்துவதாகவும் பாவனையாளர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (க-122)

# அதிகரிக்கப்பட்ட மகாபொல கொடுப்பனவை வழங்குவதில் தாமதம்

அதிகரிக்கப்பட்ட மகாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவை உடனடியாக வழங்குமாறு பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாதமொன்றிற்கு 2 ஆயிரம் ரூபா வீதம் மகாபொல புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகின்றது.

இக்கொடுப்பனவுத் தொகை 500 ரூபாவால் அண்மையில் அதிகரிப்புச் செய்யப்பட்டது. ஆனால் இன்னும் அதிகரிக்கப்பட்ட 500 ரூபா வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகரிக்கப்பட்ட மகாபொல புலமைப் பரிசில் தொகையினை வழங்குவது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதுவும் மகாபொல நிதியத்துக்கு கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப் புலமைப்பரிசில் மானியத்தை வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தைக் கண்டித்து எதிர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழக மாணவ அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன. (து-9)

## நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

மாசேரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் தென்மராட்சி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.உமாபாலன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

நடப்பு வருட புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் நடைபெற்றது.

தலைவராக செல்வி சுரேக்கா நடராசாவும், செயலாளராக செல்வி ஜெயவதனி தங்கராசாவும், பொருளாளராக செல்வி விஜிதா சிவ[illegible]தசுந்தரமும் கணக்காய்வாளராக திருமதி செல்வராணி ரவிச்சந்திரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

எண்மர் கொண்ட நிர்வாக சபையினரும் அன்றைய தினம் தெரிவுசெய்யப்பட்டனர். (து-122)

# பாடசாலைகளில் திருட்டு

தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் மூன்று பாடசாலைகளில் இருந்த விலையுயர்ந்த பொருட்கள் அண்மையில் களவாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம், கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் மற்றும் கெற்பேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் இருந்த பொருட்களே திருடப்பட்டனவாகும்.

இதன் காரணமாக குறித்த பாடசாலைகளின் கல்விசார் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் தெரியவருகின்றது.

அத்துடன் பாடசாலைகளில் இருக்கக்கூடிய உபகரணங்களுக்கு பாதுகாப்பற்ற நிலை இருப்பதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (க-16)

## இன்று ஒரு தகவல்

# நுண்ணறிவு

ஒருஅரசன் சேவகன் இருவரும் குதிரையில் வந்து கொண்டிருந்தார்கள் . நீண்ட தூரம் வந்துவிட்டார்கள் அரசனுக்குத் தாகம் எடுத்தது. தண்ணீர் எங்கே கிடைக் கும் என்று பார்த்தார்கள். பக்கத்தில் வீடுகள் எதுவும் இல்லை கொஞ்ச தூரத்தில் வேலியில் ஒரு வெள்ளரிப் பழம் தெரிந்தது. அதோ ஒருவெள்ளரிப்பழம் அதையா வது பறித்து உண்ணலாம் என்றான் மன்னன் இதோ பறித்துக்கொண்டு வருகிறேன் என்று புறப்பட்டான் சேவகன். அதுவெள்ளரிப் பழமில்லை என்றது ஒரு குரல். "யார் அது? " என்று அவர் கள் இருவரும் திரும்பிப்பார்த் தார்கள்.

ஒரு பார்வையில்லாத பிச்சைக்காரன் பக்கத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். அவன்தான் அப்படிக் குரல் கொடுத்தது. அரசன் பார்த்தான் இவனுக்கோ பார்வை இல்லை இவனுக்கு எப்படி அது வெள்ளரிப் பழமா இல்லையா என்பது தெரியும்? நீ போய் பறித்துக் கொண்டு வா இவன் ஏதோ தெரியாமல் சொல்கிறான் என்றான் .சேவ கன் போய்ப்பறித்துக்கொண்டுவந்தான். மன்னன் அதை வாங்கிச் சாப்பிட்டான் வாயில் வைக்க முடியவில்லை அவ னுக்கு ஆச்சிரியம் பிச்சைக் காரனி டம் கேட்டான் அது எப் படி இது வெள்ளபிர்பழமில்லை என்பது உனக்குத் தெரிந் தது?" என்றான்.

அவன் சொன்னன் "ஐயா இது நான்கு பேர் வந்து போகும் இடம் அது வெள்ளரிப்பழமாக இருந்திருந்தால்.. வருபவர் கள் இவ்வளவு காலம் அதை விட்டு வைத் திருக்க மாட்டார் கள் அதனால்தான் அது வெள்ளிரிப் பழ மாக இருக்க முடியாது என்று நினைத்தேன். என்றான். அடுத்ததாக தண் ணீருக்கு என்ன செய்யலாம் என்று யோசித்தான் மன்னன் சேவகன் சொன்னன் அரசே இங்கி ருந்து நான்கு பக்கமும் சாலை போகின்றது. நான் இப் படியே கிழக்கே போகும் இந்தப் பாதை வழியாகப் போய்ப் பார்க்கிறேன் அங்கே ஏதாவது நீர் நிலைகள் இருக்கும் தண்ணீர் எடுத்து வருகி றேன் என்று புறப்பட்டான்.

இப்போதும் அந்தப் பார்வையில்லாத பிச்சைக்காரன் சொன்னான் ஐயா கிழக்கே போனால் தண்ணீர் கிடைக் காது தெற்கே போகும் பாதையில் போனால் தண்ணீர் கிடைக்கும் என்றான். அவன் சொன்னது போலவே தெற்கில கொஞ்ச துரம் போனால் ஒரு பெரிய குளம் இருந்தது. இது எப்படிதெரியும் உனக்கு? என்று கேட்டான். மன்னன் ஐயா எனது உடலில் ஆடை இல்லை தெற்கில் இருந்துவரும் காற்று குளிர்ச்சியாக இருந்தது. அதனால் அங்கே தண் ணீர் இருக்கும் என்று நினைத்தேன் என்றான்.

அரசன் பார்த்தான் இப்படிப்பட்ட ஒரு ஆள் அரண் மனையில் எப்போதும் இருந்தால் மிகவும் உபயோகப்படு வான் என்று நினைத்தான் அப்படியே அவனைத்தூக்கி குதிரையில் வைத்து அரண்மனைக்கு கொண்டுசென் றான். தினமும் ஒரு பொதி சாம்பார் சாதம் அவனுக்குக் கொடுக்கும் படியாக உத்தரவிட்டான் அரசன் அப்படியே நடந்தது.

அந்த அரண்மனைக்கு ஒருநாள் ஒருவைரவியாபாரி வந்தான். மன்னன் அவன்கொண்டுவந்த வைரத்தை யொல் லாம வாங்கி இவனிடம் கொடுத்து சோதிக்கச் சொன் னான். இவன் வாங்கி கையாலேயே சோதித்துப் பார்த்து அவற்றை இரண்டு பிரிவாகப் பிரித்து வைத்துவிட்டான். இடது பக்கம் இருப்பது எல்லாம் வைரம் வலது பக்கம் இருப் பது எல்லாம் கண்ணாடிக்கல் என்றான் எப்படிக்கண்டு பிடித்தாய் ? என்று கேட்டான் மன்ன்ன் ஒவ்வொரு கல்லை யும் எடுத்து கையில் மூடிவைத்திருந்த பார்த்தேன் நமது உடல சூடு கல்லிலல் ஏறினால் அது வைரம் ஏறாவிட் டால் அது கண்ணாடி அப்படித்தான் அதைக் கண்டு பிடித்தேன் என்றான்.

அரசனுக்கு ஆச்சரியம் சரி இன்றிலிருந்து இவனுக்கு தினமும் ஒரு பொதி தயிர் சாதமும் கொடுங்கள் என்று உத்தரவிட்டான். அப்படியே நடந்தது ஒருநாள் அந்த மன்னன் அவனிடம் கேட்டான் என்னை எல்லோரும் பிச் சைக்கார ராஜா என்கிறார்களே என்றான் எப்படிச் சொல் கிறாய் ?" என்றான் மன்னன் அது உண்மை தான் என றான் அவன் நீ உண்மையிலேயே பரம்பரை ராஜவம் சமாக இருந்திருந்தால் ஆரம்பத்திலேயே அது வெள் ளரிப்பழம் இல்லை என்று சொன்ன போதே என் திறமை யைப்பாராட்டி உன் கழுத்தில் உள்ள மணி மாலையைக் கழற்றிப் பரி சாக் கொடுத்திருப்பாய் அது மட்டுமல்ல ஒரு பொட்டலம் சாம்பார் சாதம்... ஒரு பொட்டாலம் தயிர் சாதம்... இப்படி எந்த ராஜாவும் கொடுக்க மாட்டார்கள் என்றான்.

அதன் பின்தான் அந்த ராஜா உண்மையைச் சொன் னான் "ஐயா! நான் பரம்பரை ராஜா இல்லை உன்னை மாதிரி பிச்சைஎடுத்துக்கொண்டிருந்தவன் தான் இந்த நாட்டு வழக்கபடி அரண்மனை யானை என் கழுத்தில் மாலை யைப் போட்டுவிட்டது. அதனால் ராஜாவாகி விட்டேன்! அவ்வளவுதான் என்றான்.பார்வை இல்லாவிட்டாலும் நுண்ணறிவு எந்தளவுக்கு பார்வையாகப் பயன்படுகின்றது. என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

குடும்பத்திலும் இந்த நுண்ணறிவு உபயோகப்படும் பெட்டியில் 10ரூபா பணம் இருந்தது. திடீரென்று 5 ரூபா காணமால் போய்விட்டது. மீதி 5 ரூபா மட்டும் இருந்தது. நமது மகன்தான் எடுத்திருப்பான் என்றார் அம்மா நிச்சய மாக இது நமது மகனின் வேலையாக இருக்காது அவன் எடுத்திருக்கமாட்டான் என்றார் அப்பா எப்படிச்சொல்கிறீர் கள்? என்றார் அம்மா அவனாக இருந்தால் பெட்டியில் மிச்சம் வைத்திருக்கமாட்டான் என்றார் அப்பா.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குடாநாட்டு மக்களே வன்னி செல்லுங்கள்!

# மகேஸ்வரன் எம்.பி. வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வாழ்ந்துவரும் இளைஞர் யுவ திகள் உட்பட அனைவரையும் உடனடியாக தற்காலிக மாக யாழ். குடாநாட்டில் இருந்து வெளியேறி வன்னி பெருநிலப்பரப்பிற்கு செல்லுமாறு கொழும்பு மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பனிர் தி.மகேஸ்வரன் அவசர கோரிக்கை ஒன்றிணை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், யாழ். குாடநாடு உட்பட வடக்கு கிழக்கில் இராணுவத் தினருக்கும் கடற்படையினருக்கும் தாக்குதல்களை மேற் கொள்வதற்கு இலங்கை அரசு பூரண அதகிாரத்தை இர கசியமாக வழங்கியுள்ளது.

தினமும் 15 பொதுமக்கள் யாழ். குடாநாட்டில் இலங் கை அர்ச படையினரால் கொல்லப்படுகின்றமை அம் பலமாகியுள்ளது.

பலருடைய உடல்கள் எங்கு மறைக்கப்படுகிறது என்று கூட எவருக்கும் தெரியாது மாயமாய் மறைந்து போகின்றது.

எனவே யாழ்.குடாநாட்டில் இருக்கும் அனைத்து தமிழ் மக்களும் தற்காலிகமாக யாழ். குடாநாட்டில் இருந்து வெளியேறி வன்னி பெரு நிலப்பரப்பிற்கு செல்லுங்கள் அனைத்து தமிழ் மக்களும் பாதுகாப்பாக வெளியேறும் வரைக்கும் யாழ்.குடாநாட்டில் சிங்கள படையினரதும் கடற் படையினரதும் நகர்வுகளை மக்கள் முடக்க வேண்டும்.

யாழ் .குடாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட காலத்தில் எத்தகைய ஒரு இராணுவ நடமாட் டத்தை முடக்கம் செய்வதற்கு தொடர் ஆர்ப்பாட்டங்களில் நான் செயற்பட்டனோ அவ்வாறான ஒரு நடவடிக்கை யில் மக்கள் இறங்கவேண்டும்.

மஹிந்த அரசு யாழ்.குடாநாட்டில் பல மர்மக்கொலை களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளமை இரகசியமாக அறியமுடிகிறது எனவும் தெரிவித்துள்ள மகேஸ்வரன் இலங்கையில் அரச படைகளால் நடாத்தப்படும் எந்த கொலைக்கும் நீதிகள் இல்லை. இலங்கையில் தர்மம் என்பதை சிங்கள ஆட்சியாளர்களிடம் இருந்து பெற முடியாது இன்று வடக்கு கிழக்கிலும் தென் இலங்கையி லும் தொடரும் தமிழர் கொலைகள் தமிழர் சரித்திரத் தில் என்றும் நடந்தவை அல்ல.

இலங்கையின் ஜனாதிபதி தமிழரை கொல்லு வதற்கு பூரண அதிகாரம் வழங்கியுள்ளார் ஆகவே யாழ். குடா நாட்டு மக்களே உங்கள் உயிர்களை பாதுகாப்பதற்கு உடனடியாக வன்னி பெருநிலப்பரப்பிற்கு செல்லுங்கள் இது தற்காலிகமானதாக அமையும் இதே நேரம் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலி கள் இவர்களுக்கு பூரண தங்குமிட மற்றும் அனைத்து வசதிகளை செய்து கொடுப்பார்கள் என்றுள்ளது. (க)

# தமிழ் எம்.பிக்களுக்கு— பாதுகாப்பு அளியுங்கள்!

## சபாநாயகரிடம் மாவை எம்.பி. கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர்களானசெ. கஜேந் திரன், செல்வம்அடைக் கலநாதன் ஆகியோ ரின் அலுவலகங்களைத் தேடிச் சென்று படையி னர் தாக்கியுள்ளனர்.

அவர்களுக்குஉயிர் அச்சுறுத்தலும் விடுக்கப் பட்டுள்ளது. எனவே அவர்க ளுக்கு உரிய பாதுகாப்பை வழங்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என சபாநாயகரிடம் தமிழரசுக்கட் சியின் செயலாளர் மாவை சேனாதிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகங் களைத் தாக்குவதும் அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுப்பதும் நிறுத்தப்படவேண்டும் அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க சபையின் தலைவர் என்ற வகை யில் சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சேனாதிராசா கேரியுள்ளார்.

குறிப்பிட்ட இரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடிப் படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. எனத்தெரிவித்த சேனாதிராசா அடுத்து நாடாளு மன்றம் கூடும்போது அடிப் படை உரிமைகள் மீறல் பிரேரணை ஒன்றை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்க விருக்கின்றோம் என்றும் கூறி னார். (க)

# கிராமிய மட்டப் பாடசாலைகளில்— ஆங்கில ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவரு தன் காரணமாக நூற்றுக்கணக்கான கிராமிய மட்டப்பாட சாலைகளில் பயில்கின்ற மாவணவர்கள் ஆங்கில மொழி யினைக் கற்கும் வாய்ப்பினை இழந்த நிலையில் இருந்து வருகின்றனர்.

இத்தகைய நிலை தென்மராட்சி, வடமாராட்சி , தீவ கம், வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயங்க ளில் நீண்டகாலமாக நிலவிவருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

இதேவேளை, மேற்படி வலயங்களில் இயங்கி வருகி ன்ற நகர்ப்புற பெரிய பாடசாலைகளிலும் கூட ஆங்கில பாடம் மாணவர்களுக்கு கற்பிப்பதில்லை எனவும் கூறப்படு கின்றது.

இதன் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆங் கில மொழியின் தரும் மிகவும் கீழ் நிலைக்குச் சென்று விட் டதாக ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் ஒருவர் அபிப் பிராயம் வெளியிட்டுள்ளார்.

இது இவ்விதமிருக்க ஆங்கில பாடம் போதிப் பதற்கென கல்வித் திணைக்களத்தினால் கடந்த காலங் களில் ஒப்பந்தம் அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆங் கில மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தவர்களிக் சேவையை யும் திணைக்களம் முற்றாக நிறுத்திக்கொண்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆங்கில மொழிியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான தட்டுப்பாடு தொடர்ந்து நிலவி வருவதன் காரணமாக மாவட்டத்தில் அங்குமிங்கும் இயங்கிவரும் தனியார் கல்வி நிலையங் களிலும் கூட ஆங்கில மொழி புகட்டப்படுவதில்லை எனத் தெரியவருகின்றது.

இந்நிலையில் பாடசாலை மாணவர்களுக்கு ஆங் கில பாடம் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ள போதிலும் கூட தமது பிள்ளைகளுக்கு ஆங்கிலம் புகட்டிவிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையே தொடர்வதாக பெற்றோர் தரப் பில் கூறப்படுகின்றது.

மேலும் மாவட்டத்திலுள்ள சில முக்கிய இடங்களில் தனியார் நடாத்திவரும் கல்வி நிலையங்களில் ஆங்கில பாடம் பயில ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு பிள்ளைக்கு 300 ரூபா அறவிடப்படுவதாகவும் அறியப்படுகின்றது. (க-16)

# கதிரைச் சண்டை நடத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் தனது 11 உறுப்பினர்களை அர சாங்கத் தரப்பு இருக்கைகளில் அமரவைக்க ஜே.வி.பி. ஒப்புக்கொண்டுள்ளது.

அரசாங்கத்தரப்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் பல ருக்கு ஆசனங்கள் ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்தன ஆனால் நேற்று முன்தினம் எதிர்க்கட்சி வரிசையில் அவர்கள் அமர்ந்து கொண்டனர். இதனால் சர்ச்சை ஏற்பட்டது.

இதையடுத்து அனைத்துக்கட்சித் தலைவர் கூட் டத்தைக் கூட்டுமாறு சபாநாயகரை எதிர்க்கட்சி கொறாடா ஜோசப் மைக்கேல் பெரேரா கேட்டுக்கொண்டார்.

ஜே.வி.பி.யினரோ அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டலாம் என்றும் சமரசசெயற்பாடாக தங்களது கட்சியின் 11 உறுப்பினர்களை அரசாங்கத் தரப்பு ஆசனங்களில் அமர வைக்கசாத்தியங்கள் இருப் பதாகவும் தெரிவித்தது. (க)

# வேகமாக செல்லும் வாகனங்களால் பாதசாரிகளுக்குப் பெரும் சிரமம்!

சாவகச்சேரி நகர்ப்புற பிரதான வீதியில் செல்லும் வாகனங்கள் வேகக்கட்டுப்பாட்டினை அனுசரியாமல் மிக வேகமாகச் செலுத்தப்படுவதால் பாதசாரிகள் மற் றும் சைக்கிள் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை அன்றாடம் எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிய வருகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை பாடசாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் வாகனங்களின் வேகக்கட்டுப்பாட்டினை அவசியம் கைக்கொள்ளச் செய்ய வேண்டிய அறிவுறுத்தல்களை மேற்கொள்ளும் படி சாவ கச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் தென்மராட்சி பிரதேச செயலரிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸார் தற்போது வீதி வேகக் கட் டுப் பாட்டுப்பணியில் ஈடுபடுவதில்லை என்றும் சுட்டிக் காட் டப்பட்டுள்ளது. (க-16)

# எமது நிலம் தொடர்ந்து இரத்தத்தால் நனைவதற்கு அனுமதிக்க முடியாது!

## என்கிறார் கி.சிவநேசன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடக்கு – கிழக்கு தமிழர் தாயக நிலப்பரப்புகளில் இராணுவ கட்டுப்பாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் அவலம் தொடர்கதையாக நகர்வதை இனிமேலும் அனுமதிக்க முடியாது என கி.சிவநேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

எமது நிலம் இரத்தத்தால் நனைக்கப்பட்டு வருவதையும் கல்வி, பொருளாதார வளங்கள் சிதைக்கப்படுவதையும் ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

நாளுக்கு நாள் தமிழர்கள் கொலை செய்யப்படுவது அதிகரித்துச் செல்கிறது. நான்குமாதக் குழந்தையைக் கூட இரக்கமற்று கொலை செய்யும் படையினரின் கொடூரத்தனத்தை எப்படி பார்த்துப் பொறுத்திருப்பதென தமிழ்மக்கள் பொங்கி எழுகின்றனர்.

கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், காணாமல்போதல், துன்புறுத்தல் என படையினராலும், துணைக்குழுக்களாலும் நடாத்தப்படும் கொடுமைகளால் நிம்மதியற்ற வாழ்வு வாழ்வது எவ்வளவு காலம்? இளைய தலைமுறைகளை இனங்கண்டு கொடூரமாக கொலைசெய்யும், வதைசெய்யும் படலத்தை தொடரவிடுவதா? எனக் கேள்வி எழுப்புகிறார்கள்.

இராணுவமும் துணைப்படையினரும் நேரிலே சென்று நடாத்தும் இக்கொடூரச் செயல்களை உடனும் மறுத்துக் கூறும் இராணுவப் பேச்சாளர்களும், சமாதான செயலக அதிகாரிகளும் இராணுவத் தளபதிகளும் இருக்கும்வரை தமிழின அழிப்பு தொடரும்.

இதை தமிழ்பேசும் மக்கள் உணர்ந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள தவறக்கூடாது. அதற்காக பாதுகாப்புள்ள இடங்களுக்கு மாறுவது அவசியம்.

புத்தூர் கொலைகள், நெல்லியடி கொலைகள், அல்லைப்பிட்டி கொலைகள், மந்துவில் காணாமல் போனோர் நிலை, நாளாந்தம் கொல்லப்படும் அப்பாவிப் பொதுமக்கள் இவற்றை நேரில் தமது கட்டுப்பாட்டில் நடாத்திவிட்டு மறுகணமே தமக்கும் இந்நடவடிக்கைகளுக்கும் தொடர்பில்லை என மறுக்கும் இராணுவப் பேச்சாளரின், சமாதான செயலக பேச்சாளரின் கபட நாடகத்தை சர்வதேச சமூகம் ஏன் தட்டிக்கேட்கவில்லை? போர்நிறுத்தக் கண்காணிப்பு பிரிவினரின் கடமைகள் கூட தளம்பல் நிலையிலேயே காணப்படுகிறது. இந்நிலை தொடர்வதை பார்த்து பொறுத்திருப்பது எவ்வளவு காலம்?

தமிழ் ஊடகங்கள் அனைத்தும் நாளாந்தம் துன்பநிலையை கூறுவதாகவே உள்ளன. குறிப்பாக இளைய தலைமுறையின் கல்விக்கான பாதிப்பை ஏற்படுத்த திட்டமிட்டு சிங்கள ஆட்சியாளர்கள் கடந்த காலங்களை விட உயர்ந்த நிலையில் செயல்படுவது கவனிக்கத்தக்கது.

எனவே இராணுவத்தாலும் அவர்களுடன் சேர்ந்த துணைக்குழுக்களாலும் நடாத்தப்படும் அவலத்தை தொடராது தடுக்க சர்வதேசம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இதன்மூலம்தான் சமாதான பேச்சுவார்த்தை தொடர முடியும். அவ்வாறில்லாவிடின் எமது தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் கூறியது போல நாம் எமது மண்ணிலும் கடலிலும் சுதந்திரமாக நடமாடும் வரை மாற்றானை சுதந்திரமாக நடமாடவிட முடியாது.

இதை இலங்கை அரசும், அரச சமாதான செயலக பேச்சாளர்களும், இராணுவ பேச்சாளர்களும் கவனத்தில் எடுக்கத் தவறினாலும் சர்வதேச சமூகம் கவனத்திலெடுக்கத் தவறக் கூடாது. தமிழர் மீதான படுகொலையுடன் இலங்கை அரசே சமாதான ஒப்பந்தத்தை புறந்தள்ளி வலிந்துபோரினை தொடக்கியவர்கள் எனும் நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழல் உருவாகுவது தவிர்க்கமுடியாதது என்றுள்ளது. (க)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

சைவநெறித் தேர்வு 2006க்குரிய விண்ணப்ப இறுதித் திகதி 19.5.2006 என முன்னர் அறிவிக்கப்பட்டது.

நாட்டின் சூழ்நிலை காரணமாகவும் அதிபர்களின் ஆலோசனைக்கு ஏற்றவாறும் விண்ணப்ப இறுதித் திகதி 30.6.2006 வரை நீடிக்கப்பட்டுள்ளது. (க)

## மீனவர்கள் தாக்கப்பட்டனர்

(திருநெல்வேலி)

வடமராட்சி ஆதிகோவிலடி வாடிவான் பிரதேசத்தில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் இருவரை படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த அப்புலிங்கம்– அமிர்தலிங்கம், துரைச்சாமி – சிவலிங்கம் ஆகிய இருவருமே தாக்கப்பட்டவர்கள் என வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (க-43)

## படகுகளை பதிவு செய்யக் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கடற்றொழில் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட இயந்திர படகுகளை பாவிக்கும் சகல கடற்றொழில் உரிமையாளர்களையும் தங்களின் படகுகளின் விபரத்தையும், இயந்திரங்களின் விபரத்தையும் கடற்றொழில் பரிசோதகர் அலுவலகத்தில் அல்லது தங்கள் சங்கப் பணிமனையில் உடன் பதிவுசெய்யுமாறு தீவக கடற்றொழில் பரிசோதகர் ம,மி.அன்றூவ் கேட்டுள்ளார். (க-72)

## 3000 முஸ்லிம்கள் இடம்பெயர்வு

மூதூரில் இராணுவ முகாம் அருகாமையில் உள்ள அகதிகள் முகாமில் நடந்த படுகொலைகளையடுத்து மூவாயிரம் முஸ்லிம்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

மூதூர் கந்தளாய் வீதியில் ஜின்னா நகர் மற்றும் ஆசாத் நகரிலிருந்து அனைவரும் வெளியேறியுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அப்பகுதியின் நிலைமைகள் மோசமடைந்திருப்பது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ ஆகியோரை நேற்று முன்தினம் இரவு சந்திக்கத் திட்டமிட்டதாகவும் ஹக்கீம் கூறியுள்ளார். (கு)

## மீன்பிடிக்க அனுமதி

வடமராட்சி கடலில் நேற்று முதல் மீன்பிடிப்பதற்கு படையினர் மீனவர்களுக்கு அனுமதி வழங்கினர்.

மாலை 6 மணிமுதல் காலை 6 மணி வரைக்குமே மீன்பிடித்தொழிலில் ஈடுபட முடியும் என்றும் காலை 6 மணிக்கு முன்னர் அவர்கள் கரை திரும்ப வேண்டும் எனவும் படையினர் மீனவர்களுக்கு அறிவுறுத்தினர் என வடமராட்சி கடற்றொழில் சமாசம் தெரிவித்துள்ளது. (கு-43)

# நாம் அனைவரும் ஆயுதம் ஏந்திப் போராடும் காலம் வந்துவிட்டது என்கிறார் பால்ராஜ்

(கிளிநொச்சி)

நாம் அனைவரும் ஆயுதம் ஏந்திப்போராட வேண்டிய ஒரு இறுதிக் காலம் வந்துவிட்டது. இவ்வாறு கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜ் லெப்.கேணல் நவத்தின் 17 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்றைய சூழலைப் பொறுத்தவரை நான்காம்கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்றுதான் கூறவேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தபோது தான் யதார்த்தவாதி என்று கூறியமையால் அவருக்கான சந்தர்ப்பத்தினை வழங்கியுள்ளோம். ஆனால் அதனை அவர் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. பிறேமதாஸ ஆட்சிக்காலத்திலும் இதே போன்ற படுகொலைகள் கண்மூடித்தனமாக நடைபெற்றன.

அல்லைப்பிட்டியில் அண்மையில் ஏதுமறியாத பிஞ்சுகள் கொடூரமான முறையில் படுகொலைசெய்யப்பட்டன. நாங்கள் இன்று சமபலத்துடன் இருக்கின்றோம். இனிவரும் நாட்களில் அனைவரும் வயது வேறுபாடின்றி ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய ஒரு இறுதிக் காலத்துக்குள் வந்துவிட்டோம்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை நாங்கள் நிச்சயமாக வெல்லுவோம். இலங்கையில் பல இராணுவத் தளபதிகள் வந்து வந்து போகின்றார்கள். ஆனால் எமது மரபுவழி இராணுவத்திற்கு தமிழீழத் தேசியத் தலைவர்தான் தலைவராக உள்ளார். அவருடைய காலத்தில் எமக்கான விடுதலை நிச்சயமாகக் கிடைக்கும். நாங்கள் அனைவரும் மூன்று மடங்குகளாக உழைக்க வேண்டிய காலமாகவும் தற்பாதுகாப்பிற்காக ஆயுதம் ஏந்த வேண்டிய காலமாகவும் இக்காலம் உருவாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து மூத்த போராளி யோகி லெப்.கேணல் நவத்தின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுரையாற்றுகையில்,

சிங்கள தேசம் எங்களை பலமிழந்தவர்களாக கருதக்கூடாது. அன்று ஆயிரம் வரையான போராளிகள் இருந்தபோது உலகத்தினுடைய வல்லரசுகளில் ஒன்றான இந்தியாவினால் வெல்லமுடியாது போனது. இன்று பல்லாயிரம் போராளிகள் உள்ளோம். சிங்கள தேசம் எதனையும் எமக்கு தரப்போவதில்லை. அன்றும் இன்றும் நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தலைவர் போராட்டத்தை வளர்த்துச் செல்கிறார்.

லெப். கேணல் நவம் மேஜர் பசிலனுடன் போராட்டத்தில் இணைந்து செயற்பட்டவர். உடல் வலுவிழந்த போதும் உறுதி தளராத ஒரு போராளி. மணலாற்றுக்காட்டிலே அவரது பணி மிக முக்கியமானது.

அன்று இந்தியப்படை ஆக்கிரமிப்புக் காலத்தில் தமிழீழத் தேசியத் தலைவரின் பாதுகாப்பு லெப்.கேணல் நவத்திடம்தான் இருந்தது. அத்துடன் மீள்கட்டுமானம், படைவலு என்பவற்றிற்கும் நவம்தான் காரணமாக இருந்தவர் என யோகி மேலும் தெரிவித்தார்.

லெப்.கேணல் நவத்தின் 17ஆவது நினைவு நிறைவு நிகழ்வு லெப்.கேணல் நவம் அறிவுக்கூட வளாகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 5.00 மணிக்கு நவம் அறிவுக்கூடப் போராளி தமிழன்பு தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து நவம் அறிவுக்கூட போராளிகளின் மாவீர வணக்க நடனம், சங்கநாதம் குழுவினரின் கலைநிகழ்வு, நவம் அறிவுக்கூடப் போராளிகளின் கவியரங்கம், நாடகம் என்பனவும் நடைபெற்றன. சிறப்புரையினை தளபதி கேணல் பால்ராஜும் நினைவுரையினை மூத்தபோராளி யோகியும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பொதுமக்கள், தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் எனப் பலர் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். (க)

# அச்சம் காரணமாக 250 குடும்பங்கள் இடம்பெயர்வு

(திருநெல்வேலி)

தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக குடத்தனை, மணற்காடு, அம்பன் பகுதிகளில் உள்ள சுமார் 100 குடும்பங்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான செம்பியன் பற்று, மாமுனை பகுதிகளில் இருந்தும் சுமார் 150 குடும்பங்கள் முல்லைத்தீவுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளதாக கூறப்படுகின்றது. இவர்களின் குடியிருப்புக்களுக்கு கிட்டவாக இராணுவ காவலரண்கள் இருப்பதால் இராணுவத்தினர் அங்கிருந்து தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடும் என அச்சம் தெரிவித்தே குறித்த பகுதி மக்கள் முல்லைத்தீவுக்கு சென்றுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (கு-43)

## நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

மாசேரி கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும், அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.உமாபாலன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது தலைவராக க.ஆறுமுகமும், செயலாளராக சி.அருணாசலமும் தனாதிகாரியாக வ.யோகநாதனும், கணக்காய்வாளராக கு.நந்தகுமாரும் தெரிவுசெய்யப்பட்டனர். எண்மர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (கு-122)

# பாதுகாப்பான இடங்களை நோக்கி நகரும் மக்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மக்கள் மத்தியில் என்றுமில்லாதவாறு பதற்றமும் அச்சமும் மேலோங்கியுள்ளது. குடாநாட்டில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் கோரப்படுகொலைகள், கடத்தல்கள், கைதுகள் காரணமாகவே மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக குடாநாட்டிலுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக யாழ். தீவகப் பகுதியில் மக்கள் மத்தியில் தொடர்ந்தும் அச்சம் நீடித்து வருகின்றது. வயது வேறுபாடின்றி ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என பலதரப்பட்டவர்களும் படுகொலை செய்யப்பட்டிருப்பதையடுத்தே பதற்றம் மேலோங்கியுள்ளது. (க)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை



### சிறைக் கொட்டடியில் 42

ஆனால் யாரையும் பார்க்க அனுமதிக்கவில்லை வாரத்திற்கு இரு முறை மட்டும் சிலரை பார்க்க அனுமதித்தனர் அந்த நாட்களில் சலவை செய்த உடைகளைக் கொண்டுவந்தனர். தவறாமல் சுவையான உணவு தயாரித்துக்கொண்டு தமிழ்த்தாய் தில்லை நாயகிபிள்ளை அம்மாள் வந்து உணவு பரிமாறிக்கொண்டே இருந்தார். அவர் பரிமாறிய உணவும் சுவையானது அவர் காட்டி வந்த பரிவும் அன்பும் அமிழ்தமாக இருந்தது என்பார் மண்டேலா. வந்தவர்கள் வழங்கிய அன்பளிப்புக்கள் மிகுந்து கிடந்ததால் சகக் கைதிகளுக்கும், வார்டர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கத் தொடங்கினார். முதலில் ஒரு வெள்ளை வார்டர் தான் ஆப்பிளை வாங்கினார் பின்னர் எல்லோரும் வாங்கிக்கொள்ளத் தொடங்கினர். சிறையில் அதிகாரிகளை விட வார்டர்களுடன் உறவு வைத்திருப்பதுதான் நல்லது.

பக்கத்து அறையிலிருந்து ஒரு இருமல் சத்தம் கேட்டது. அது ஏதோ தெரிந்த குரல் போல இருந்தது. அது யார் வால்ட்டரா என்றவுடன் ஆம் மண்டேலா என்ற பதில் வந்தது. வால்ட்டர் ஜாமீனில் வெளியேறவும் மண்டேலா தொடர்ந்து வழக்கை நடத்தவும் முடிவெடுத்தனர்.

மண்டேலாவை மீண்டும் சிறை மருத்துவமனைக்கு மாற்றி விட்டார்கள் இங்கிருக்கிற போது சில சட்டப் புத்தகங்கள் வேண்டுமெனக் கேட்டு முறையிட்டார். விடுபட்டுப்போன எல்.எல். பி.யை முடித்து விட வேண்டும் என ஆசைப்பட்டார் அதற்காக "டார்ட்ஸ் புத்தகம் என எழுதியிருந்ததை டார்ச் எனப் புரிந்துகொண்டு என்ன தீ வைக்கப் புத்தகம் தேடுகிறாயா?" என ஒர் அதிகாரி கேட்டவுடன் மண்டேலா சிரித்து விட்டு டார்ட்ஸ் என்றால் என்ன என்று விளக்கினார். அதைக் கேட்டபின் அதிகாரி கூச்சத்துடன் திரும்பி விட்டார்.

சிறையில் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்த போது , தினநாத் என்ற இந்தியக் கைதி மண்டேலாவை அணுகினார். மண்டேலாவுக்கு அருகிலிருந்த அறையில் அடைக்கப்பட்டார். அவர் ஒரு வியாபாரி மோசடி வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் அவரைப் பொலிஸார் வேவு பார்க்கப் பயன்படுத்த முயன்றனர்.அவர் சில மாதங்களில் விடுவிக்கப்பட்டார்.

சிறையிலிருந்த தப்பி விடுவது மீண்டும் தலைமறைவாக வேலை செய்ய வாய்ப்புக்கிடைக்கும் தப்பி விட்டால் அது இயக்கத்திற்கும் ஒரு பெரிய வீச்சைக்கொடுக்கும் அதற்காக சிறைக்கட்டடத்தைப் பற்றிய முழுவரை படத்தை வரைந்து மண்டேலா வெளியில் அனுப்பியிருந்தார். படித்து முடித்தவுடன் அதைக் கிழித்து அழித்து விடும்படி எழுதியிருந்தார்.

அதை வரலாற்று ஆவணமாகப் பின்னர் பயன்படுத்தலாம் எனக் கருதி நண்பர்கள் கிழித் துப் போடவில்லை அதுவே பின்னர் வினையாக முடிந்தது.

### மீண்டும் விசாரணை

1962 அக்டோபர் 15 ஆம்திகதி விசாரணை தொடங்குவதாக இருந்தது. மண்டேலாவை விடுதலை செய்க என்பதற்காக பல குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. நீதிமன்றத்திற்கு வரும் வழி நெடு மிகப் பெருமளவில் திரளப் போவதாகவும் செய்தி வந்தது. ஆனால் முன்னறிவிப்பு ஏதுமின்றி பிரிட்டோரியாவிலுள்ள முன்பு ராஜதுரோக வழக்கு நடந்த அதே திருச்சபைக்கட்டடத்திற்கு அழைத்துச் சென்றனர் யாருக்கும் தெரிவிக்கப்படாமல் இந்த மாற்றம் செய்யப்பட்ட போதிலும் ஆயிரக் கணக்கில் மக்கள் மன்றத்திற்கு முன்னால் திரண்டு விட்டனர் வழக்குக்கு உதவுவதாக இருந்த ஜோஸ் லோவே வர இயலவில்லை ஏனெனில் அவர் ஜோகன்ஸ்பர்க்கை விட்டு வெளியேறக்கூடாது என்ற தடைச்சட்டம் இருந்தது.

மண்டேலா புலித்தோல் போத்திய சோசா உடையில் வந்தார் இந்த மேலாடையை எடுத்து விடும்படி வார்டரும் அதிகாரிகளும் வற்புறுத்தியும் மண்டேலா மறுத்துவிட்டார். தொட்டால் சுப்ரீம் கோர்ட் வரை வழக்கு நீளும், என மண்டேலா எச்சரித்தார். நீதிமன்றத்தில் அந்த உடையில் தோன்றினாலும் வெளியில் செல்லும் போது மட்டும் கழற்றிவிடும்படி வேண்டினர். அந்த ஆடையே கலவரத்தைத் தூண்டக்கூடும் என அஞ்சினர்.

நீதிபதியிடம் மண்டேலா முறையிடும் வகையில் ஒரு அரசியல் விளக்கப்பிரசங்கம் செய்தார்.

இங்கே என்னை வெள்ளை நிறப் பொலிஸார் இழுத்து வந்தனர். இங்கே வெள்ளை நிற நீதிபதி அமர்ந்திருக்கிறீர் சிறையிலும் வெள்ளை நிற அதிகாரிகள்தான் . ஒரு கருநிறக் குற்றவாளியை விசாரிக்க கருநிற நீதிபதியைக் காணோம் பிறப்பையும், நிறத்தையும் வைத்து வகுக்கப் பட்ட சட்டத்தினடிப்படையில் நான் எவ்வாறு நீதியை எதிர்பார்க்க முடியும்... எனத் தொடங்கி நிற வெறி அரசின் கொள்கைகள் அனைத்தையும் சாடி ஆப்பிரிக்க தேசியக் காங்கிரசின் கொள்கைகளை விளக்கி ஒரு பேருரையையே ஆற்றி அமர்ந்தார் கூடியிருந்த மக்களின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது.

அரசு தரப்பில் நூற்றுக்கும் அதிகமான சாட்சிகள் விசாரிக்கப்பட இருப்பதாகச் சொன்னார் கள் முதல் சாட்சியாக பிரதமரின் செயலாளர் பார்னார்டை மண்டேலா குறுக்கு விசாரணை செய் தார்.

ஒரு புதிய இனவெறி நிறவெறி இல்லாத அரசியல் சட்டத்தை வகுக்க ஒரு தேசிய மாநாடு கூட்டப்பட வேண்டும் எனப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தை வைத்தே விசாரணையைத் தொடங்கினார் பார்னார்டு நிறவெறித் திமிரோடு பதில் கூறினார் மண்டேலா கேட்ட கேள்விகளில் சில.

கே: ஒருகருநிறத்தவன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆக முடியுமா?

பதில்: சட்டப்படி முடியாது.

கே: நகராட்சி, மாநில அமைப்புக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படமுடியுமா?

பதில்: சட்டப்படி முடியாது.

கே:தடையின்றி நடமாட ,பேச முடியுமா?


பதில்:சட்டத்திற்குட்பட்டுத்தான் நடக்க பேசவேண்டும்.

கே:இவை பற்றி வவாதித்துத் தீர்வு காணத்தானே கடிதம் எழுதப்பட்டது. ஏன் பதில் எழுதவில்லை?

பதில்: அக்கடிதம் அகங்கார தொனியில் இருந்தது. எனவே பதில் எழுதப்படவில்லை. பின்னர் நூற்றுக்கணக்கான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். இறுதியில் உங்கள் தரப்பு சாட்சி எனக் கேட்ட போது சாட்சிகள் தேவையில்லை நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன் எனக் கூறிவிட்டு உட்கார்ந்தார். தண்டனைக் குறைப்புக்காக முறையிடுகிறீரா? எனக் கேட்ட போதும் ஏதும் சொல்வதற்கில்லை என்று மட்டும் சொன்னார் மண்டேலா மறுநாள் நீதிமன்றம் கூடுவதற்கு முன் அரசு தரப்பு வக்கீல் வந்து மண்டேலாவைப் பார்த்து கைகுலுக்கி விட்டு மண்டேலா என்னை மன்னியுங்கள் நான் ஒரு நிர பராதியை எதிர்த்து வாதாடியதற்காக வருந்துகிறேன் என்று கூறிவிட்டுப் போனார். சிறு இடைவெளிக் குப் பிறகு நீதிமன்றம் கூடியது வேலை நிறுத்தத்தைத் தூண்டியதற்காக மூன்றாண்டு கள் பாஸ் போர்ட் இல்லாமல் நாட்டைவிட்டுப்போனதற்காக இரண்டாண்டுகள் ஆக பரோல் இல்லாத ஐந் தாண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

(தொடரும்)





சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பொ.சணமுகநாதன் எழுதிய 'நினைக்க... சிரிக்க... சிந்திக்க...' நகைச சுவை கட்டுரை தொகுப்பு நூல் அறிமுக விழாவில் சி.சிவசரவணபவ (சிற்பி) தலைமையுரை நிகழ்த்துவதையும் நூலின் சிறப்புப் பிரதியினை சுன்னாகம் இலங்கை வங்கி உதவி முகாமையாளர் A.T கதிர வேலுபதில் நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசுவிடமிருந்து பெற்றுக் கொள்வதையும் நூலாரியர் பொ. சண்முகநாதன் பக்கதில் நிற்பதையும் படங்களில் காணலாம்.



யாழ். ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலையில் சிறுவர் பாதுகாப்பு அமைபபினால் அமைக்கப்பெற்ற கட்டடத்திறப்பு விழாவில் கலந்து கொண்ட பிரதம விருந்தினர்களான வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சறுவர் பாதுகாப்பு அமைப்பைச்சேர்ந்த வைத்திய கலாநிதி பேரின்பநாதன், உடுவில் கோட்டக்கல்விப்பணிப்யாளர் செ.குபேரநாதன, கலாபூசணம் சு.துரைசிங்கம் ஆகியோர் பாண்டு வாத்திய சகிதம் வித்தியாலய அதிபர் த.வாமதேவனால் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம்.

## குப்பைகளை அகற்ற வாகன வசதி இல்லை

சாவகச்சேரி நகர சபையிடம் போதியளவு வாகனம் இன்மையால் வட்டாரங்களில் சேரும் குப்பை கூளங்களை உடனுக்குடன் அகற்ற முடியாமல் இருப்பதாகத் தெரியவருகின்றது. தற்போது நகர சபையிடம் ஒரேயொரு உழவுயந்திரம் மட்டுமே இருப்பதாக நகரசபையின் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் தென்மராட்சி பிரதேச செயலரிடம் ஒரு உழவு யந்திரம் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார். இது இவ்விதமிருக்க, நகரமத்தியில் உள்ள மலசல கூடத்தின் கழிவுகளை சாதாரண முறையில் அகற்றுவதற்கு கடினமாக இருப்பதால் நவீன கழிவகற்றும் இயந்திரம் ஒன்றிணைப் பெற்றுத்தர ஆவண செய்யும்படியும் நகர சபையின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க தாகும். (கு-16)

## மூதூரில் மற்றுமொருவர் கொலை

மூதூர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை நபர் ஒருவர் கொலை . செய்யப்பட்டுள்ளார். மூதூர் 35 ஆவது மைல் கல்லுக்கு அருகில் கொல்லப்பட்டவரது சடலம் கண்டு பிடிக்கப்பட்டதாக திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். இந்த நபர் தாக்கப்பட்டு கொல்லப்பட்டதற்கான தழும்புகள் உடலில் தென்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்டவர் பேக்கரி ஒன்றில் கடமையாற்றியவர் எனவும் தெரிவித்துள்ளனர். (து-9)

> பிறக்கும் குழந்தைகள் அனைத்தும் ராஜ்யத்தின் பொதுவுடமை சொத்துக்கள் ஆகிவிட்டால், குழந்தைகள் பிறப்பதில் எல்லோருக்கும் ஒரேமாதிரியான ஆனந்தமும் அவை மரிப்பதில் ஒரே மாதிரியான துக்கமும் உண்டாகிறது.
>
> -பிளேட்டோ

வலம்புரி

# சிறுவர் அமைப்புக்களின் தார்மீகக் கடமை

அல்லைப்பிட்டியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடந்த படுகொலையில் இரண்டு சிறுவர்களும் அடங்கியிருந்தனர்.

நெடுங்கொடூரமாக நடந்த அந்தப்படுகொலையில் ஒரு சிறுவனும் பச்சிளம் குழந்தை ஒன்றும் சுடப்பட்டு மரணமான சம்பவம் தமிழ் மக்களின் மனங்களை ரணமாக்கியுள்ளது.

உலகம் முழுவதும் சிறுவர்கள் உரிமைகள் பற்றி பேசப்படுகின்றபோது இலங்கையில் மட்டும் தமிழ்க் குழந்தைகள் ஈவிரக்கமற்ற முறையில் சுட்டுக்கொல்லப்படும் நிகழ்வு ஏன் நடக்கிறது?

உலக சிறுவர் அமைப்புக்கள் பேசுகின்ற சிறுவர் உரிமைகளில் இருந்து ஈழத்தமிழ்க்குழந்தைகள் விலக்கப்பட்டவர்களா? என்ற சந்தேகமும் தற்போது எழுந்துள்ளது.

அல்லைப்பிட்டியில் நடந்தது போன்ற படுகொலைச் சம்பவங்கள் வேறு எந்த நாட்டிலேனும் நடந்திருந்தால் இன்று அது ஐ.நா.சபை உள்ளிட்ட அனைத்து அமைப்புக்களாலும் கண்டிக்கப்பட்டிருக்கும்.

ஆனால், அல்லைப்பிட்டியில் நடந்த சிறுவர் படுகொலையை கண்டிக்க, அதுபற்றி உலக அரங்கில் எடுத்துக்கூற யாருமே இல்லை என்ற 'அநாதை நிலை' நமக்கேற்பட்டுள்ளது.

இதை விட மிகப்பெரிய மோசத்தனம் இலங்கை அரசினதும் ஜனாதிபதியினதும் அமைதிப்போக்காகும். அல்லைப்பிட்டியில் இரவோடு இரவாக நடந்த பயங்கரப்படுகொலை-அதில் பச்சிளம் குழந்தை ஒன்றும் முன்பள்ளி சிறுவனும் படுகொலை செய்யப்பட்டனரே.

இது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எடுத்த நடவடிக்கைதான் என்ன?

இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற முறையில் அந்தப்படுகொலை தொடர்பில் தனது சார்பில் ஒரு பிரதிநிதியை அனுப்பி உண்மை நிலையைக் கண்டறிந்திருக்க வேண்டும்.

இது ஒரு நாட்டின் ஜனாதிபதி என்ற தார்மீகப் பொறுப்பில் செய்யப்பட்டிருக்கவேண்டும். எனினும் அதை அவர் செய்யவில்லை.

பரவாயில்லை. 1978 களில் இருந்து இலங்கையின் ஜனாதிபதி பதவியில் இருப்பவர்களின் வழமைக்கும். மரபுக்கும் மகிந்த மட்டும் என்ன? விதிவிலக்கா?

தமிழர்கள் என்றால் அவர்கள் எந்த வயதானவராக இருப்பினும் அவர்கள் சுட்டுக்கொல்லப்படலாம் என்ற சிங்கள ஆட்சியாளர்களின் நியதியைத் தான் மட்டும் எவ்வாறு விலத்துவது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னளவில் கேள்வி எழுப்பியிருக்கலாம்.

ஆனால். மூன்று பிள்ளைகளின் தந்தை என்ற வகையிலாவது அல்லைப்பிட்டியில் இரண்டு சிறுவர்கள் உயிரிழந்தமை பற்றி விசாரணை நடத்தியிருக்கலாம்.

இது ஒருபுறம். மறுபுறத்தில் இந்த நாட்டின் எதிர்க்கட்சியாக இருக்கின்ற ஐக்கிய தேசியக்கட்சி பொறுப்புடன் நடந்துகொள்ளுமாக இருந்தால் நிச்சயமாக அல்லைப்பிட்டி படுகொலை தொடர்பாக பொறுப்புள்ள கருத்துக்களை வெளியிட்டிருக்கும்.

என்ன செய்வது? சிறுபான்மை என்ற பெயரால் எல்லாமே மௌனித்துப்போயுள்ளன.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கருணா குழு இயங்கவே முடியாது

## அரசுக்கு க.கா. குழுத் தலைவர் பதில்

(கொழும்பு)

**அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில்தான் கருணா குழுவினர் இயங்குகின்றனர் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அவர்கள் இயங்கினால் அது தற்கொலை யானது என்றும் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப்ஹென்றிக்சன் கூறியுள்ளார். தங்களது கட்டுப்பாட்டுப் பகுதியில் கருணா குழு இயங்கவே இல்லை என்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அவர்கள் இயங்கக் கூடும் என்றும் அரசாங்கம் மற்றும் இராணுவத் தரப்பு தொடர்ந்து கூறிவருவதும் நிலையில் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் அதை உறுதியாக மறுத்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அமைதி முயற்சிகளில் எதிர்மாறான விளைவுகள் ஏற்படுவது குறித்து நாம் கவலை கொள்கிறோம். வடக்கு கிழக்கில் நடைபெறும் அனைத்து வகையான வன்முறைகளையும் கண்டிக்கிறோம்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாது அப்படியான ஒரு தீர்வு காணப்படுமேயானால் கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கவேண்டும்.

தற்போதைய இலங்கை நிலைமைகள் மிகவும் மோசமானது பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் ஆகையால் இரு தரப்பும் எதுவித தாமதமும் இன்றி பேச்சு மேசைக்குத் திரும்ப வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் இராணுவத்தை இப்போது வெற்றி கொள்ள முடியாது இராணுவத்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள முடியாது அப்படியான நிலையில் ஏன் இந்த நாம் இப்படிப்பட்ட சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டும்.

இலங்கைத்தீவில் கருணா குழுவினர் இராணுவத் தினருடன் இணைந்து பல பகுதிகளில் செயற்படுகின்றனர் இது ஆச்சரியமளிக்கிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் அப்பொறுப்பிலிருந்து விலகுவதான செய்திகள் குறித்து எமக்கு எதுவும் தெரியாது அவர்களிடம் தான் கேட்க வேண்டும்.

இராணுவத்தினர் முன்னரங்க நிலைகளுக்கு நகர்ந்திருப்பதை ஒரு தற்காலிக நிலைப்பாடாகவே கருதுகிறேன் முன்னர் கூறியது போல் அரசாங்கம் ஒரு முழு அளவிலான யுத்தத்துக்குத் தயாராக இல்லை என்று கருதுகிறேன் இராணுவம் அதற்கான பயிற்சிகளில் மோசமாக உள்ளது போருக்கான நோக்க மும் குறைவானதே.

ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து அச்சத்துடன் வெளியேறி வரும் நிலையில் அரச படைகள் முன்னரங்க நிலைகளை நோக்கி நகர்த்தப்படுவது நிலைமையை மேலும் சிக்கலாக்கும்.

### கருணா குழுவிடமிருந்து ஆயுதங்களை களைவது கடினம்

கருணா குழுவினர் நன்கு பயிற்சி மேற்கொண்டவர்கள் அவர்கள் ஆயுதக்களைவதை விரும்பமாட்டார்கள் கருணா குழுவினரது ஆயுதக்களைவு என்பது மிகவும் கடினமானது அரச படைகள் அத்தகைய ஆயுதக் களைவுநடவடிக்கையை மேற்கொள்ள முனைந்தால் அது பாரிய சிக்கலை உருவாக்கும் ஆகையால் அரசாங்கமானது கருணா குழு ஆயுதக் களைவை மேற்கொள்ளுமா என்பது சந்தேகத்துக்குரியது.



அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து கருணா குழு இயங்குவதற்கான வலுவான தரவுகள் உள்ளன. அக்குழுவினருக்கு சில நேரங்களில் அரச படைகள் ஆதரவளிக்கின்றன. கருணா குழுவைச் சேர்ந்த ஒரு நபர் இராணுவ முகாமுக்குள் செல்கிறார் எனில் அந்த இருதரப்பினரும் இணைந்து செயற்படுவதாகவே கொள்ளமுடியும் அதில் இருவேறு கருத்துக்கள் இல்லை.

கண்காணிப்புக் குழுவில் வடக்கு-கிழக்கு முழுமைக்குமான கண்காணிப்புப் பணிகளுக்கு மொத்தம் 60 பேர் மட்டுமேயுள்ளனர். இந்த எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாக பேசி வருகிறோம்.

இனப்பிரச்சினை உள்ள பகுதியில் கண்காணிப்புக்குழுவினர் உட்பட எவருமே பாதுகாப்பானவர் அல்ல விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் கண்காணிப்புக்குழுவினர் முதலாவது இலக்காக இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையுள்ளது. கடந்த வாரம் விடுதலைப்புலிகளின் படகுகள் மீது இராணுவம் மோட்டார் தாக்குதலை நடத்தியது அது ஒரு பாரிய யுத்த நிறுத்த மீறல் தான் இராணுவ தளபதிக்கும் படை யினருக்குமிடையே பாரிய தகவல் தொடர்பு இடைவெளி யுள்ளது.

மந்துவில் பகுதியில் கண்காணிப்புக்குழுவினர் 30 மணி நேரம் கழித்தே சென்றதாக கூறப்படுவது குறித்த உண்மை நிலை எமக்குத் தெரியாது கண்காணிப்புக் குழுவினர் நடந்தவற்றை பற்றி கேட்டு அறிய மட்டுமே முடியும் எமது உறுப்பினர்கள் அங்கு சென்றபோது பொலிஸார் அங்கு இருந்தனர். ரி.56 துப்பாக்கிகள் மற்றும் இரத்தக் கறைகள் அப் பகுதியில் இருந்தன. அங்கே எந்த சடலத்தையும் நாம் பார்க்கவில்லை.

கருணா குழுவினர் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்குகின்றனர். அவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்குவது என்பது தற்கொலை முயற்சியாகும். கடந்த வாரம் விடுதலைப் புலிகளுக்கும் கருணா குழுவுக்கும் நடந்தமோதலிதை உறுதிப்படுத்தியுள்ளது என்றார். (ஓ)

# படுகொலைகளின் எதிர்வினையை இலங்கைஅரசு விரைவில்உணரும்!

## காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசன் எச்சரிக்கை



(கிளிநொச்சி)

தமிழ் மக்கள் மீதான படுகொலைகளின் எதிர் வினையை இலங்கை அரசு விரைவில் உணரும் என்று தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் பா. நடேசன் மேலும் கூறியுள்ளதாவது,

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனவாதக் கொள்கையுடன் இராணுவ ரீதியிலான தீர்வை எட்டுவதற்கே முயற்சி செய்கின்றார்.

கடந்த தேர்தல்மூலம் ஆட்சியை தனதாக்க சிங்களப்பேரினவாதக் கொள்கைளைக் கொண்ட கட்சிகளுடன் உடன்பாடுகளை எட்டி பேரினவாதக் கொள்கைளையே தனது தேர்தல் கருவாகக் கொண்டு ஆட்சியை கைப்பற்றியிருந்தார்.

அதன் தொடர்ச்சியாக அமைச்சர்களையும் இராணுவத் தலைமைப்பீட அதிகாரிகளையும் கடும் போக்குக் கொண்டவர்களாக வே நியமித்திருந்தார். அதேபோலவே ஜெனிவாப் பேச்சுக்களின் போது கூட ஆலோசகராக இலங்கையின் முக்கியமான கடும் இனவாதப் போக்குக் கொண்டவர்களில் ஒருவரான எச்.எல்.டி.சில்வா நியமிக்கப்பட்டிருந்தார்.

ஜெனிவாப் பேச்சுக்கள் நிறைவு பெற்று விமான நிலையம் திரும்பிய உடனேயே பேச்சில் எட்டப்பட்ட விடயங்களுக்கு எதிரான கருத்துக்களை பேச்சுக்குழுவில் இடம்பெற்றிருந்த அரச தரப்பினர் வெளியிடத் தொடங்கினர்.

ஜெனிவாவில் கூறப்பட்ட கருத்துக்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதிலேயே மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தொடக்கம் முதல் ஈடுபட்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சீண்டும் நோக்கில் தமிழின அழிப்பு நடவடிக்கையினை இலங்கை அரச படைகள் மேற்கொண்டு வருகின்றன. தமிழ் மக்களை பெரும் எண்ணிக்கையில் படுகொலை செய்யப்படுகின்றனர். இந்த நடவடிக்கைகள் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் போரினை தொடங்குவார்கள் என்றும் அதனை சர்வதேசத்தின் முன் வெளிப்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளே போரை தொடங்கி விட்டனர். என்றும் கூறுவதற்கு மஹிந்த ராஜபக்ஷ கனவு காண்கிறார்.

சர்வதேச ரீதியாக பல்வேறு விடுதலை போராட்டங்களுக்கு தீர்வுகள் எட்டப்பட்டு வரும் நிலையில் மஹிந்த ராஜபக்ஷவின் இந்தக் கொள்கையை எந்த நாடுகள் ஏற்றுக்கொள்ளாது.


தமிழீழதேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் காலத்தில் தமிழ் மக்களை எவரும் மிரட்டி பணிய வைக்க முடியாது. எதிர்வரும் காலங்கள் தமிழினத்திடம் இருந்தும் சர்வதேசத்திடம் இருந்தும் சிங்களப் பேரினவாதிகள் புதிய பாடங்களைக் கற்றுக்கொள்ளும் காலமாக அமையவுள்ளன.

மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை இராணுவ பலத்தால் ஒருபோதும் வெல்ல முடியாது. தற்போது தமிழர் பிரதேசங்களில் அரச படைகளால் மேற் கொள்ளப்பட்டு வரும் கொலை நடவடிக்கைகள் தமிழ் மக்களை பெரும் கொதி நிலைக்குத் தள்ளியுள்ளது என்றார் (சு)

### தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்

**நீ வாழும் போது மற்றவர்களை வாழவை. நீ இறந்த பிறகு அவர்கள் உன்னை வாழ வைப்பார்கள்.**





கிளிநொச்சியில் நேற்று நடந்த கண்டனப்பேரணியின் சில காட்சிகள்...

# உண்மையை வெளிப்படுத்த தவறின் தாங்கள் வெளியேறும் நிலை ஏற்படும்

## கண்காணிப்புக் குழுவிற்கு த.தே.வி.கழகம் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக 60பேர் வரை அரச படைகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் இது விடயத்தில் தாங்கள் அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வருகிறீர்கள். இவ்வாறு தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

யாழ்.குடாநாடில் அரச படைகளே கொலைகளைப் புரிகின்றனர் என்ற உண்மை நிலையை தாங்கள் அறிந்திருந்த போதும் இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வான நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை.

அத்துடன் அரச படைகளே இந்த கொலைகளைப் புரிகின்றனர் என்ற உண்மையை வெளியிடவும் இல்லை. இதன் காரணமாக இராணுவத் தரப்பு தமிழ் மக்கள் மீதான தனது கொலை வெறியை எதுவித தயக்கமும் இன்றி செய்து வருகின்றது.

தீவுப்பகுதியில் அல்லைப்பிட்டி, புளியங்கூடல் பகுதிகளில் வைத்து மதுபோதையில் சென்ற கடற்படையினரால் எதுவும் அறியாத இரண்டு குழந்தைகள் உட்பட 13 பேர் படுக்கையில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இது பற்றி தாங்கள் அறிந்த போதும் அதனைக் கண்டித்து அறிக்கை விடவில்லை. உண்மை நிலையை உலகிற்கு தெரியப்படுத்தவும் இல்லை. கண்காணிப்பாளர் என்ற நிலைமாறி தாங்கள் அரசிற்கு சார்பாகவே செயற்படுகின்றீர்கள்.

எனவே தாங்கள் உண்மையான கண்காணிப்பாளர்களாக இருந்தால் தமிழ் மக்கள் மீதான படுகொலையை வெளிப்படுத்த வேண்டும். இல்லாவிடில் தாங்கள் இங்கு கண்காணிப்பாளராக இருத்தலில் அர்த்தமில்லை என்பதனை தங்களுக்கு மனவேதனையுடன் அறியத்தருகின்றோம்.

ஆக்கபூர்வமாக விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் தாங்கள் வெளியேறும் நிலை உருவாகும் என்பதனையும் விரக்தியின் விளிம்பில் நின்று தெரிவிக்கின்றோம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-05)

## பொறியியலாளர் கைது

(யாழ்ப்பாணம்)

செம்பியன்பற்றில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பொறியியலாளர் பத்மநாதன் கிரிதரன் (வயது 54) முகமாலையில் வைத்து நேற்று படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் பயணம் செய்த டொல்பின் வானில் இருந்து கைக்குண்டொன்றை கைப்பற்றியதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (ந-15)

### படுகொலைகளை...

அக்கடிதத்தின் விபரம் வருமாறு;

இலங்கையில் நாளுக்கு நாள் படுகொலைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இன்று இலங்கையில் நடக்கும் நிகழ்வுகளை தாங்களும் சர்வதேச சமூகமும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கின்ற வேளையில் அவை பற்றிய விளக்கங்களை தரவேண்டிய தேவையில்லை.

பெண்கள் ,குழந்தைகள் உட்பட எந்த விதமான பால்,வயது வேறுபாடின்றி அப்பாவிப் பொதுமக்கள் அன்றாடம் கொலை செய்யப்படுகிறார்கள். நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் இப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய ஒரு அவசர தேவை இன்று உருவாகியுள்ளது.

உள்நாட்டில் சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவைகள் கேட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையில் எமது இயலாமையின் உச்சக்கட்டமாக இப் படுகொலைகளை உடனடியாக தடுத்து நிறுத்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமாகிய தங்களிடம் நாம் முறையிடவும் உதவி கேட்கவும் வேண்டிய இறுதிக் கட்ட நேரம் வந்துவிட்டது.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் அப்பாவிப் பொதுமக்கள் ,பெண்கள், குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் என இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவர் பேராலும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

எமது இந்த அவசர அழைப்பை தாங்கள் உடனடிப் பரிசீலனைக்கு எடுத்து அப்பாவிப் பொதுமக்களின் படுகொலைகளுக்கு உடன் முற்றுப்புள்ளிவையுங்கள். பேச்சுவார்த்தைமூலமாக சமாதானத்தை அடைய உடன் நடவடிக்கை எடுங்கள் என மனிதாபிமான ரீதியில் தங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறோம் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# அல்லைப்பிட்டி மக்கள் தேவாலயத்தில் தஞ்சம்

## யாழ்.அரச அதிபர் நேரில் சென்று பார்வை

அல்லைப்பிட்டியில் அண்மையில் இடம்பெற்ற கொடூர சம்பவங்களை அடுத்து 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி அல்லைப்பிட்டி தேவாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளன.

தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் கிடைக்கும் வரை புனித.பிலிப்மேரியார் தேவாலயத்திலேயே தங்கியிருக்கப்போவதாக இடம் பெயர்ந்த மக்கள் யாழ்.அரச அதிபர் கணேஷிடம் தெரிவித்துள்ளனர்.

தேவாலயத்தில் தங்கியுள்ள மக்களில் பெண்கள், சிறுவர்களைத் தவிர ஏனையவர்கள் பகல் வேளையில் வீடுகளுக்குச் சென்று இரவு தேவாலயத்திற்கு திரும்புகின்றனர்.

இங்கு தங்கியுள்ள மக்களின் அவல நிலையை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். அவர்கள் தமது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் பெற்றுத் தருமாறு தம்மிடம் கோரியதாகவும், இவ்விடயம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகளுடனும் ,கடற்படையினருடனும் கலந்துரையாடி ஒரு சில தினங்களில் தீர்க்கமான முடிபை தருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு தொடர்ந்து சமைத்த உணவுகளை வழங்கி வருவதாக தெரிவித்த யாழ்.அரச அதிபர் இரவு வேளைகளில் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்த மக்களுக்கு அரச சார்பற்ற பிரதிநிதிகள் சிலர் ஆதரவாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதாக தெரிவித்தார். (ந-05)

### பரவலாக...

ஆகிய இடங்களிலேயே கைக்குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது.

இதில் நாயன்மார்கட்டு செம்மணி வீதியில் படையினர் மீது நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சில் படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இச் சம்பவத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை பேரின்பராசா தேவராணி (வயது 45) நல்லூர் கச்சேரிவீதியைச் சேர்ந்த மாணிக்கம் இரத்தினம் (வயது 78) ஆகியோர் காயமடைந்து யாழ்.போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-15,43)

### படுகொலைகளை கண்டித்து...

கூட்டத்தில் கஜேந்திரன் எம்.பி. உரையாற்றுகையில், தமிழி னத்தை கொல்லும் அரசு மீது சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வராது போனால் போரைத் தொடங்கிதாயக நிலங்களை மீட்டு நம் மக்களை பாதுகாக்கும் நிலைவரும்.

போரைத்தவிர வேறு தெரிவு தமிழ் மக்களுக்கு தற்போது இல்லை. தமிழ் மக்கள் தொடர்பில் சிறிலங்கா அரசும் சர்வதேச மும் கொண்டுள்ள நிலைப்பாடு தெளிவாகிவிட்டது என்றார். மக்க ளை படைகள் கொல்லும் போது அறிக்கைகளை வெளியி டாது படைகள் தாக்கப்படும்போது மட்டும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அறிக்கை விடும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஒரு தலைப்பட்சமான செயற்பாட்டையும் தமிழ்ச் சிறுவர்கள் கொல் லப்படும் போது மௌனம் காக்கும் யுனிசெவ் அமைப்பின் செயற் பாட்டையும் கண்டிக்கும் பதாகைகள் பேரணியில் சென்றவர்கள் தம் கைகளில் தாங்கியிருந்தனர்.

ஐ.நா.பொதுச்செயலாளருக்கான கண்டன அறிக்கை யுனிசெவ் பிரதிநிதியிடம் கி.சிவநேசனால் கையளிக்கப்பட்டதுடன் அதன் பிரதி ஒன்று கிளிநொச்சியில் உள்ள போர் நிறுத்த கண்காணிப்புக்குழு அதிகாரியிடமும் கையளிக்கப்பட்டது. (ந-05)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
எஸ்.ஜெ.சூரியா, நயன்தாரா
நடித்த
கள்வனின் காதலி

கா.நே: 10.30, 2.15, 5.30, 8.45

ராஜா தியேட்டர் யாழ்ப்பாணம்
04.05.2006 முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்ஷன்
கிங்கொங்
(KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசால்லை மாணவர்களுக்கு விசேட சலுகை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 17.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.